றைக்கு உலகமே அதைத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. மரங்கள் இல்லையென்றால் நமக்கு வளங்கள் இல்லை. ஒரு முறை ரசிகமணி டி. கே. சி. அவர்களிடத்தில் வெளிநாட்டுக்காரர் ஒருவர் கேட்டார், உங்கள் நாட்டில் மரங்களை நீங்கள் எப்படிப் பாதுகாக்கிறீர்கள் என்று. அதற்கு ரசிகமணி அவர்கள் சொன்ன பதில், நீங்கள் மரங்களைப் பாதுகாக்கிறீர்கள். ஆனால் நாங்கள் மரங்களைத் தெய்வமாக வழிபடுகிறோம் என்று சொன்னார்கள். அதனால்தான் நமது நாட்டில் பல்லாண்டு காலமாக மரங்களை தெய்வமாக வழிபடும் முறை இருந்து வருகிறது. மரங்களை தெய்வமாக்குவது என்பதை சிலர் தங்களுடைய பிழைப்புக்காக செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தீவிர முயற்சி எடுத்து அதெல்லாம் தவறான கருத்து என்று விளக்கினால் நல்ல பலன் ஏற்படும். ஆகவே, மரங்களை தெய்வமாக வழிபடும் முறை தவறானது என்பதை மாற்ற வேண்டுமே தவிர மரத்தை தெய்வத்திற்குச் சமமாக பாது காப்பது என்ற உணர்வை அழித்துவிடக்கூடாது.

பெரியகுளத்திலுள்ள கும்பக்கரையைச் சுற்றுலாத் தலம் ஆக்கும் திட்டம்.

181—(வினா எண் 17879)—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளத்திலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : மாவட்ட உலாத் தலமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கும்பக்கரை என்பது பெரியகுளத்திற்கு அருகில் உள்ள சுற்றுலாத்தலமாகும். அந்த இடத்திலே இயற்கையிலேயே ஆண்டுதோறும் நீர்வீழ்ச்சி விழக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்து சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தால் இன்னும் நிறைய சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியும். எனவே, அந்த இடத்தை அபிவிருத்தி செய்து, பயணிகள் தங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இரண்டு முக்கியமான இயற்கை அழகுள்ள இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட உலாத்தலங்களாக ஆக்கப்படுவதற்கான திட்டத்தின் அடிப்படையில் மதுரை மாவட்டத்தில் விரகனூர் அணைப் பகுதி அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இரண்டாவதாக அந்தக் கும்பக்கரை நீர் வீழ்ச்சி அபிவிருத்தி திட்டத்திற்காக சுமார் 7 லட்சம் மதிப்பீட்

1984 மார்ச் 6]

டில் பல்வேறு துறைகளின் மூலம் அந்த நீர்வீழ்ச்சிப் பகுதியை அழகுள்ளதாக மக்கள் விரும்புகிற வகையில் வசதிசெய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பக்கரையைச் சுற்றுலாத் தலமாக ஆக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கும்பக்கரைக்கும் மேலே கொடைக்கானலுக்கு வெள்ளக்கல் வழியாக குறுக்கே பாதை போடுவதற்கு இதற்கு முன்பு ஒரு அமௌன்ட் கூட சாங்ஷன் செய்யப்பட்டு இருந்தது. அந்த ரோடு போட்டால், இந்த கும்பக்கரை சுற்றுலாத் தலமாக ஆகும்போது இன்னும் அதிகமான பயணிகள் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இதை அரசாங்கம் சிந்தித்து செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற திட்டத்தின்படி அம்மாய நாயக்கனூர் மற்றும் பெரியகுளம் வழியாக கும்பக்கரை வரைக்கும் சுமார் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலையை அமைக்க வேண்டிய திட்டம் ஒன்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல், கொடைக்கானலை தொடர்பு கொள்ளத் தக்க வகையில் அந்தப் பாதையை அமைக்க வேண்டுமானால், அது காடுகளுக்குள்ளே, காடுகள் வழியாக பாதை அமைக்கவேண்டுமென்று நினைக்கிறேன். காடுகளுக்குள்ளே இப்போது பாதைகளை அமைப்பது சுலபமான காரியம் அல்ல. 'பாரெஸ்ட் கன்சர்வேஷன் ஆக்ட்' என்று மத்திய சர்க்கார் ஏற்ற பிறகு, மலை வாழ் மக்களுக்கு பாதை அமைத்துக் கொடுப்பதற்கு அனுமதி வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே பொதுவாக காடுகளுக்குள்ளே பாதைகள் அமைப்பது, கட்டிடங்கள் கட்டுவது என்பது மத்திய அரசு மாநில அரசு பொதுவாக இப்போது குறைத்துகொண்டு வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் கும்பக்கரையைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு ரூ. 7 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு அது ஆய்வில் உள்ளதாகச் சொன்னார்கள். இதை மிகவும் துரிதமாகச் செய்ய வேண்டிய வேலை. காரணம் என்னவென்றால், வெளிநாடுகளிலிருநது சுமார் 372 குழந்தைகள் கொடைக்கானலில் இருந்து படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வந்து இறங்கி குற்றாலத்திற்குப் போகவேண்டுமென்றால், கும்பக்கரைச் சுற்றுலா மையமாக தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தால் நல்லது. அடிக்கடி சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். நமக்கும் அதிகமான வருமானம் வரும். ஆகவே அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுமா என்பதை அறிய

விரும்புகிறேன். நான் ஏற்கனவே கொடைரோட்டில் சுற்றுலா மையம் அமைக்க ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறேன். இதை இணைத்துப் போடுவார்களானால் நன்றாக இருக்கும். எனவே இரண்டையும் இணைப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்கும் சேர்த்து வழிவகை செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, வீராகனூர் அணைப் பகுதி இப்போது முதல் கட்டமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டாவது கட்டமாகத் தான், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

துளசியாப்பட்டினத்திலுள்ள ஒளவையார் கோவில்.

182 —(*வினா எண் 20341)—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் துளசியாப் பட்டினத்தில் ஒளவையாருக்குக் கோயில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஒளவையாருக்கு விழா ஏதாவது எடுக்கப்படுகின்றதா?

(இ) அரசு சார்பில் ஒளவையாருக்கு விழா எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தில் ஒளவையாருக்கு விழா எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஒளவையாருக்கு விழா எடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டு விழா நடத்தப்பட்டு வருகிறது. விழாவினை சிறப்பாக நடத்துமாறு தஞ்சை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் கோரப்பட்டுள்ளார்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளவையார் கோவிலுனுடைய வருமானம் குறைவாக இருப்பதனாலே, அந்தக் குழுவினர் நன்கொடை வசூல் செய்து தான் விழாவினை நடத்த வேண்டிய நிலையில் விழாவினை சிறப்பாக நடத்தமுடியாமல் இருக்கிறது. வசதியுள்ள வெளியிலுள்ள கோவில்களிலிருந்து நிதியளித்தோ, அல்லது அரசாங்கமே அந்த விழாவினை நடத்தவோ முன்வருமா?